VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine)
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020






தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ் A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

Printed Matter

If not delivered please return to
VEDABHARATHY
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

மலர்:3 இதழ்:8 மே:2019 ரூ.10/– வருட சந்தா:ரூ.100/–
Volume:3 Issue:8 May:2019 Rs.10/- Annual Subs: Rs.100/-



# ஸ்ரீ மஹா மேரு மண்டலி

81/1, மன்னப்பன் தெரு,
கோட்டூர், சென்னை – 600 085.
**போன்: 044 – 2447 4744**

## சித்ரா பௌர்ணமி திருவிழா - 2019
## 19.04.2019, சிறுவாச்சூர்








# இமைப் பொழுதில் கண் முன் உங்கள் கிரெடிட் கார்டு

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904

**சிட்டி யூனியன் பேங்க்**

www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 94450 73431, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

### இந்த அறக்கட்டளையின் நோக்கம்

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

**DONATE LIBERALLY TOWARDS CORPUS FUND**



Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**





# வேதபாரதி செய்திகள்
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 3 இதழ்: 8

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

**புத்தகக் குழு :**
ஸ்ரீ டி. சூரியநாராயணன்
டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்
ஸ்ரீமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி
ஸ்ரீ ஸ்ரீகாந்தன்,
ஸ்ரீ சௌந்தரராஜன்,
ஸ்ரீ விஸ்வநாதன்
ஸ்ரீ ஸ்ரீநிவாசன்,
வேளச்சேரி ஸ்ரீ நடராஜன்,
ஸ்ரீ ஸ்வாமிநாதன்,
நங்கநல்லூர் ஸ்ரீ விஸ்வநாதன்,
ஸ்ரீ மணிசங்கர்

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020**


# புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு | 4 |
| மே மாத விசேஷங்கள் | 5 |
| அட்டைப்பட விளக்கம் | 6 |
| பிரதக்ஷிணம் | 9 |
| சுபாஷிதம் | 11 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| புதுச்சேரி வேதபாரதி (திருமீயச்சூர்) | |
| பயணக்கட்டுரை | 14 |
| ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரரின் ஜயந்தி | 15 |
| சிருங்கேரி ஜகத்குரு மகா ஸ்வாமிகள் | |
| அருளியவை | 16 |
| மஹாபெரியவா ஜயந்தி | 18 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 26 |
| தர்மத்தின் குரல் | 28 |
| ப்ராஜெக்ட் மீனம்மா | 32 |



**சந்தா விவரம்**
வருட சந்தா ரூ.100
ஆயுள் சந்தா ரூ.1500
சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை மேற்கண்ட அலுவலக முகவரிக்கு அனுப்பவும்.
சந்தா புதுப்பிப்பவர்கள் தங்களுடைய சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

புத்தக வடிவமைப்பு
**ரெம்ஸ் பிரிண்டர்ஸ்**
1, லட்சுமிநகர்,
100 அடி சாலை, வேளச்சேரி,
சென்னை - 42. செல்: 8939000064

## ஒரு நிமிடம் உங்களோடு!

ஒருவருக்கு சக்தி அதிகமாகவும் மற்றவருக்கு குறைவாகவும் இருப்பது உண்டு. அதேபோல் அறிவும் ஒருவருக்கு ஒருவர் வித்தியாசப்படுவது உண்டு. இந்த வித்தியாசம் இருப்பது நம்முடைய மனதில்தான். நம்முடைய மனது கெட்டதானால் நாம் கெட்டவன். நம்முடைய மனது நல்லதாக இருந்தால் நாம் நல்லவன். ராமனிலும் ராவணனிடத்திலும், ஈஸ்வரச் சைதன்யம் ஒன்றுதான். ஆனால் அவர்கள் மனதால் வேறுபட்டார்கள்.

பல பாத்திரங்களில் தண்ணீர் நிரப்பி ஒரு பாத்திரத்தில் நல்ல தண்ணீரும் மற்ற பாத்திரங்களில் சிகப்பு, நீலம், பச்சை போன்ற பல நிறங்களைக் கலந்து வைத்துவிட்டு அவற்றில் சூரியனின் பிம்பம் விழும்படி செய்தால் சுத்தமான தண்ணீர் உள்ள பாத்திரத்தில் சூரியனின் பிம்பம் மிக தெளிவாக தெரியும். ஆனால் மற்ற பாத்திரங்களில் சூரியனின் பிம்பம் மங்கலாக, அந்தந்த பாத்திரத்தில் உள்ள நிறங்களுக்குத் தகுந்தாற்போல் தெரியும். இந்த வித்தியாசத்திற்கு காரணம் சூரியனா? அல்லது அந்த பாத்திரங்களா? வித்தியாசம் தெரிவது அந்த அந்த பாத்திரங்களில் கலந்துள்ள வர்ணங்களினால் தான்.

இதுபோல் நம் ஒவ்வொருவருடைய சரீரமும் ஒரு பாத்திரம் என்று வைத்துக் கொண்டால், அந்த சரீரத்தில் உள்ள மனதை தண்ணீர் என்று வைத்துக்கொண்டால் அந்த மனதில் எந்த நிறங்கள் அதிகமாக இருக்கிறதோ அதை அனுசரித்துத்தான் ஈஸ்வரனாகிய சூரியனின் பிரகாசம் பிரகாசிக்கும். அதிகமான பிரகாசம் நம் மனதாகிற தண்ணீரில் தெரியவேண்டுமானால் நம் மனது சுத்தமாக இருக்க வேண்டும். ஆன்மீகம் என்பது நம் மனதை தூய்மை படுத்தும் ஒரு வடிகட்டியைப் போன்றதாகும். நாம் ஆன்மீகத்தின் மூலம் பகவானிடத்தில் நம்முடைய மனதைச் செலுத்தினால் அது "தமோகுணம்" என்ற கருப்பு தண்ணீரையும், "ரஜோகுணம்" என்ற சிவப்பு தண்ணீரை வடிகட்டி "சத்வகுணம்" என்னும் சுத்த தண்ணீராக மாற்றும். அப்போது சுத்த தண்ணீரில் சூரியனின் பிம்பம் பிரகாசமாக தெரிவது போல் நம்முடைய மனதில் பகவானின் பிரகாசம் பிரகாசிக்கும். நம்மில் பலர் தண்ணீராகிய மனதை மாற்றுவதற்கு பதிலாக சூரியனை, அதாவது பகவானை குறை கூறுகிறார்கள்.

**- டி. சூரியநாராயணன்**



## மே மாத விசேஷங்கள்

**(மே 1/2019 முதல் மே 31/2019 வரை)**

| தேதி | கிழமை | விசேஷம் |
|---|---|---|
| 2 | வியாழன் | மத்ஸ்ய ஜெயந்தி |
| 3 | வெள்ளி | ஸ்ரீரங்கம் தேர் |
| 4 | சனி | அக்னி நக்ஷத்ரம் ஆரம்பம் (இரவு 2.15க்கு ஆரம்பம்) / அமாவாசை |
| 5 | ஞாயிறு | பிரதமை திதி |
| 6 | திங்கள் | சந்திர தரிசனம் |
| 7 | செவ்வாய் | அக்ஷய திருதியை / பலராம ஜெயந்தி |
| 9 | வியாழன் | ஸ்ரீராமானுஜர் ஜயந்தி |
| 10 | வெள்ளி | ஸ்ரீ ஆதி சங்கரர் ஜயந்தி |
| 12 | ஞாயிறு | அன்னையர் தினம் |
| 15 | புதன் | ரிஷப ரவி ஸங்கர்பணம் |
| 16 | வியாழன் | பரசுராம துவாதசி |
| 17 | வெள்ளி | ஸ்ரீநரஸிம்ஹ ஜயந்தி |
| 18 | சனி | வைகாசி விஸாகம் / புத்த பூர்ணிமா / பௌர்ணமி |
| 19 | ஞாயிறு | மதுரை கூடலழகர் தேர் / காஞ்சி மஹாபெரியவா ஜயந்தி |
| 29 | புதன் | அக்னி நக்ஷத்திரம் முடிவு (காலை 7.43க்கு முடிவு) / தத்தாத்ரேய ஜயந்தி |

### வேதபாரதியின் அன்பான வாழ்த்துக்கள்

**உபநயன ப்ரம்மோபதேசம்**

**நாள் : 16.05.2019**

**இடம் : மேலூர், மதுரை மாவட்டம்**

திரு.S.ஹரிஹர சுப்பிரமண்யன் மற்றும் திருமதி. ராஜலெட்சுமி அவர்களின் ஜேஷ்ட குமாரனான சிரஞ்சீவி H.ஆகாஷ் சரஸ்வதி கடாக்ஷம் பெற்று வேத மந்திரம் முறையாக பயின்று சீறும் சிறப்புமாக பல்லாண்டு காலம் நோயற்ற வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி ஆசீர்வாதம் செய்கிறோம்.

சுபம். வேதபாரதி,ஊரப்பாக்கம்

## அட்டைப்பட விளக்கம்
## ஸ்ரீராமானுஜர்

ஸ்ரீபெரும்புதூர் சென்னையிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் வழியில் உள்ளது என்று நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் ஸ்ரீபெரும்புதூருக்கு "பூதபுரி" என்று பெயர் இந்த ஊரில் வசித்துவந்த ''ஆசூரி கேசவ சோமயாஜி'', ''காந்திமதி'' தம்பதியினருக்கு சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் அருளால் கி.பி. 1017ம் ஆண்டு சித்திரை திங்கள் கடக லக்னத்தில் சுக்ல பட்க்ஷத்து பஞ்சமியில் வியாழக்கிழமை திருவாதிரை நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் ஒரு குழந்தை பிறந்தது. குழந்தையுடைய தாய்மாமன் பெரிய திருமலை நம்பி, குழந்தை ராமருடைய தம்பி லட்சுமணன் போல் இருந்ததால் குழந்தைக்கு "ராமானுஜன்" என்ற பெயர் சூட்டினார். அனுஜன் என்றால் இளையவர் எனப் பொருள் ராமன் + அனுஜன் = ராமானுஜன் (மளையாளத்தில் தம்பியை "அனியன்" என்றுதான் கூறுவார்கள்) இவர் ஆதிசேஷனின் மறு அவதாரம் என்பது ஐதீகம்.

ராமானுஜர் தன் தந்தையிடமே வேதங்களை எல்லாம் கற்று 15 வயதுக்குள் பூர்ண ஞானம் பெற்றார். ஆனால் 16ம் வயதில் தன்னுடைய தந்தையை இழந்தார். 17ம் வயதில் திருமணம் நடந்தது. மனைவியின் பெயர் "தஞ்சம்மாள்" பிறகு காஞ்சியில் குடியேறி திரபுட்குழி என்ற ஊரில் வாழ்ந்துவந்த ''யாதவப்பிரகாசர்'' என்பவரிடம் பாடங்களைக் கற்றார். பல்வேறு சமயங்களில் குருவிடம் ராமானுஜருக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதனால் கோபம் அடைந்த குரு இவரைக் கொன்றுவிடவும் திட்டமிட்டார். ஆனால் பெருமாளின் கருணையால் ராமானுஜர் அந்த சதியிலிருந்து தப்பித்தார். அதன்பிறகு தாழ்ந்த குலத்தில் பிறந்த "திருக்கச்சி நம்பி" என்பவரைத் தன் குருவாக ஏற்றார்.

ஸ்ரீராமானுஜர் ஆளவந்தாரைத் தம்முடைய குருவாக ஏற்கவிரும்பித் திருவரங்கம் சென்றார். ஆனால் அவர் செல்வதற்குள் ஆளவந்தார் இறைவனுடன் இணைந்துவிட்டார் என அறிந்து மனம் வருந்தினார். ஆளவந்தாரின் பூத உடலில் வல கரத்தில் மூன்று விரல்கள் மடங்கியிருந்ததைக் கண்ட



ஸ்ரீராமானுஜர் அதற்கான காரணத்தை அறிந்து "அவரது அருளாளே அவருடைய நிறைவேறாத மூன்று ஆசைகளை அடியேன் நிறைவேற்றுவேன்'' என்று சூளுரைத்ததும் மடங்கியிருந்த மூன்று விரல்களும் நீண்டு கொண்டனவாம். ''பெரும் மகானாகிய ஆளவந்தாரைக் கவர்ந்துவிட்ட திருவரங்கனை நான் சேவிக்கமாட்டேன்" என்று கூறிவிட்டு ஸ்ரீராமானுஜர் காஞ்சிக்குப் புறப்பட்டுவிட்டார். ஸ்ரீராமானுஜரின் மனைவி "தஞ்சம்மாள்" தன் கணவருடன் உள்ளன்போடு வாழவில்லை. அவர் ஜாதி ஏற்றத்தாழ்வைக் கொண்டிருந்தார். அவரின் தாம்பத்ய வாழ்வில் மூன்று சந்தர்ப்பங்களில் சாதி ஏற்றத்தாழ்வை வெளிப்படுத்தினார். அதன் காரணமாக அவரே வீட்டைவிட்டு தன் தாய்வீட்டுக்குப் போக காரணமாக இருந்தார். அதன்பின் கிபி 1049ம் ஆண்டு அதாவது 32வது வயதில் ஸ்ரீ ராமானுஜர் துறவறம் மேற்கொண்டார்.

ஸ்ரீராமானுஜர் திருக்கோட்டியூர் சென்று அங்கு வசித்துவந்த திருகோட்டியூர் நம்பியை வணங்கி திருமந்திரத்தின் திரண்ட பொருளைக் கற்றுத்தரும்படி கேட்டார். ஆனால் நம்பியோ ஸ்ரீராமானுஜரை 18 முறை திருப்பி அனுப்பினார், இருப்பினும் ஸ்ரீராமானுஜர் இடைவிடாது முயற்சித்தார். அவருடைய திடமான மனதைக் கண்டு நம்பி அவர்கள் "அஷ்டாக்ஷர" மந்திரத்தையும் அதன் உட்பொருளையும் கூறி "இந்த திருமந்திரத்தை பிறருக்குச் சொன்னால் உமக்கு நரகம் கிட்டும்" என்று கூறி அனுப்பினார். ஆனால் ஸ்ரீராமானுஜர் தான் நரகத்தை அடைந்தாலும் பரவாயில்லை. இந்த கலியுகத்தில் அனைவரும் உய்யவேண்டும் என்ற அவாவினால் தன் குருவின் ஆணையையும் மீறி திருக்கோட்டியூர் கோயில் மதில்மேல் ஏறி நின்று எல்லோரையும் அழைத்து "மகா ஜனங்களே நீங்கள் எல்லோரும் துக்கத்திலிருந்து விடுதலை அடைய நான் கூறும் இந்த மந்திரத்தை மூன்று முறை கூறுங்கள்" என்று கூறி "ஓம் நமோ நாராயணா'' என்று கூறினார். கூடியிருந்த அனைவரும் அவ்வாறே கூறித் தொழுதார்கள். இதைக் கண்ட நம்பி ஸ்ரீராமானுஜரின் பரந்த மனப்பான்மையைப் போற்றி அவரை "எம்பெருமான்" என்று அழைத்தார்.

ஸ்ரீராமானுஜர் பரிபூர்ண ஆயுளான 120 ஆண்டுகள்

வாழ்ந்தார். (கிபி 1017 முதல் கிபி1137) அறுபது ஆண்டு காலம் ஸ்ரீரங்கத்தில் ஞானமுரசாக வாழ்ந்தார். அறுபதாண்டுக்காலம் இந்திய மண்ணில் திவ்விய ஸ்தலங்களுக்கும் க்ஷேத்திரங்களுக்கும் யாத்திரை சென்றார். பல திருக்கோயில்களைக் கட்டி பல நியமங்களை வகுத்தார். ஜாதி மத பேதம் கடவுளுக்கு இல்லை என்பதை எல்லோருக்கும் உணர்த்தினார். கடவுள் ஒருவருக்குமே சொந்தமானவர் அல்ல. மதத்தின் பெயரிலான ஆணவக் கருத்துக்களையும், பத்தாம் பசலித்தனமான கொள்கைகளையும் வழிமுறைகளையும் கடுமையாக எதிர்த்தார். பிராமண குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரும்பாடு பட்டு தீண்டாமை ஒழிப்பு ஜாதி வேறுபாட்டைக் களைந்து தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபட்டார்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிபி 1137-ல் தன்னுடைய 120வது வயதில் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீராமானுஜர் பகவானுடைய திருவடியை அடைந்தார். ஸ்ரீராமானுஜர் பரமபதம் அடைந்தபோது "தர்மோ நஷ்ட" (தர்மத்திற்கே பெருத்த நஷ்டம்) என்று அசரீரி ஒலித்ததாம்.

ஸ்ரீரங்கத்தில் உள்ள ஸ்ரீஅரங்கநாத ஸ்வாமி திருக்கோயிலில் ஸ்ரீராமானுஜருக்குத் தனிச் சன்னதி ஒன்று இருக்கிறது. அந்த சன்னதியில் திரிதண்டத்துடன் அமர்ந்த நிலையில் இருக்கும் ஸ்ரீராமானுஜரின் சிலையில் கண்புருவங்கள், இமைகளும் நாசித்துவாரங்களும், உதடுகளும், நகங்களும் தத்ரூபமாக இருக்கின்றன. அதைச் சிலை என்று நம்புவதே கடினம். அது ஸ்ரீ ராமானுஜரின் உண்மையான திருவுருவம்தான் என்று ஒரு சிலரும், அல்ல அது சிலைதான் என்று சிலரும் கூறுகிறார்கள். ஸ்ரீராமானுஜர்தான் இன்றும் ஸ்ரீரங்கம் கோயிலை நிர்வகித்துவருவதாக நம்புகிறார்கள். அதற்கு சான்று இன்றும் கோயில் வரவு செலவு கணக்குகள் அவருடைய சன்னதியில் வாசிக்கப்படுகிறது. இன்றும் அனைத்து பூஜைகளும் ஸ்ரீராமானுஜருக்கு நடத்திய பிறகுதான் பெருமாளுக்கு நடைபெறுகிறது.

09.05.2019 வியாழக்கிழமை ஸ்ரீராமானுஜரின் 1002வது ஜெயந்தி.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**



## பிரதக்ஷிணம்

நம்முடைய பாரததேசத்தின் அடையாளமே கோயில்கள்தான். அதிலும் தமிழகத்தின் அடையாளம். உயர்ந்த அழகிய கோபுரங்களை உடைய கோயில்கள்தான். பெரிய பெரிய கோயில்களை எல்லாம் அந்த காலத்து அரசர்கள்தான் கட்டியுள்ளார்கள். அப்படி கட்டும்போது ஒவ்வொரு கோயிலிலும் ஏதாவது ஒன்றை தனித்தன்மையுடன் கட்டியுள்ளார்கள். பல கோயில்களில் விஞ்ஞானத்திற்கும் புரியாத பல அதிசயங்கள் நிகழ்கின்றன. தமிழகத்தில் மட்டும் 38,000 திற்கும் மேலாக கோயில்கள் இருக்கின்றன. இவற்றில் பல கோயில்களில் பல அதிசயங்கள் உள்ளன.

கோயில்களில் தெய்வங்களை வணங்கியபிறகு கோயிலை மூன்று முறை சுற்றிவருவது ஒரு மரபாகும். இதைத்தான் 'பிரதக்ஷிணம்' என்பார்கள்.

**'வேதபாரதி செய்திகள்'** வாசகர்களுக்காக மாதம் ஒரு அதிசயம் நிறைந்த கோயிலை **'பிரதக்ஷிணம்'** வர தீர்மானித்து இதுவரையில் 6 பிரதக்ஷிணம் வந்துள்ளோம்.

இந்த மாதம் "கால் அடி உயரமும், புற்று மண்ணாலும் ஆன சிறிய சிவலிங்கம்" அதிசய கோயிலில் பிரதக்ஷிணம் வருவோம்.

### பிரதக்ஷிணம் (7)
### கால் அடி உயரமும், புற்று மண்ணாலும் ஆன சிறிய சிவலிங்கம்



இந்த மிகச் சிறிய கால் அடி உயரமுள்ள சிவலிங்கத்தைச் தஞ்சாவூர் - அரியலூர் சாலையில் 12 கி.மீ. தூரத்தில் உள்ள கீழப்பழூர் என்னும் கிராமத்தில் உள்ள " ஆலங்துறையார் கட்டளை" (வடமூல நாதர்) கோவிலுக்குச் சென்றால் தரிசிக்கலாம்.

ஒருமுறை கயிலாயத்தில், அன்னை பார்வதி, விளையாட்டாக சிவனின் இரு கண்களை மூடினாள். சூரியனும், சந்திரனும் சிவனின் கண்களாக விளங்குவதால் உலகமே இருண்டு போனது. என்ன நடக்கிறது என, தெரியாமல் முனிவர்களும், தேவர்களும் மற்றும் உலக மக்களும் தவித்தனர். சிவனுக்கு கோபம் வந்தது... பார்வதியிடம், 'உன் விளையாட்டுக்கு அளவே இல்லையா... மற்றவர்களுக்கு இடையூறு செய்யாத வகையில் கேளிக்கைகள் அமைய வேண்டும். நீ தவறு செய்து விட்டாய். கையை எடு. உலகம் இருண்டு கிடப்பதைக் கவனிக்கவில்லையா?.. என்று சிவன் சொன்ன பிறகு தான், நடந்த விபரீதத்தை உணர்ந்தாள், பார்வதி.

தான் செய்த தவறுக்கு பிராய்சித்தம் கேட்டாள். 'நீ, பூலோகம் சென்று, அங்கு பல தலங்களில் தவம் செய்து, இறுதியாக அங்குள்ள யோகவனத்தில் தங்கியிரு. அங்கு வந்து உன்னுடன் சேர்வேன்'' என்றார்.

அதன்படி, பார்வதி, பூலோகம் வந்து, தவத்தை முடித்து, யோகவனத்தில் புற்று மண்ணால் சிறிய சிவலிங்கம் ஒன்றை அமைத்து, ஒற்றைக்காலில் நின்று, சிவனின் வருகைக்காக தவம் செய்தாள். சிவனும் அவளுடன் இணைந்தார்.

அந்த யோகவனத்தில் ஆல மரங்கள் அடர்ந்திருந்தன. ஆல மரத்தை, 'பழு' என்பர். எனவே, இவ்வூர், 'பழுவூர்' என பெயர் பெற்றது. சுவாமிக்கு ஆல மரத்தின் பெயரால், 'ஆலந்துறையார்' என பெயர் சூட்டப்பட்டது. பிரிந்த தம்பதி ஒன்று சேர, இங்கு விசேஷ பூஜை செய்யப்படுகிறது. தவம் செய்த அம்பிகைக்கு, 'அருந்தவநாயகி' எனப் பெயர்.

இத்தலச் சிவனுக்கு சாம்பிராணித்தைலம் பூசப்படுகிறது. லிங்கம் மிகச்சிறியது என்பதால் அடையாளம் காட்ட, அதன் மீது ஒரு குவளை கவிழ்த்தப்பட்டிருக்கிறது. இந்த குவளைக்கே அபிஷேகம் நடக்கும். வருடா வருடம் பங்குனி 18ல் சூரியன் தன் கதிர்களால் இந்த சிவனை வழிபாடு செய்கிறான். பாடல் பெற்றத் தலம்.

தேவாரப்பாடல் பெற்ற காவிரி வடகரைத்தலங்களில் இது 55வது தலம்.

காலை 6 மணி முதல் 12 மணி வரை, மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை கோயில் திறந்திருக்கும்.

பிரதக்ஷிணம் தொடரும்...

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**



# 4. சுபாஷிதம்

''சுபாஷிதம்'' என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். சம்ஸ்கிருத பாடம் கற்றுக்கொள்ளும் போது இத்தகைய சிறு சிறு ஸ்லோகங்களை கற்றுத்தருவார்கள். இந்த வகையான ஸ்லோகங்கள் சொல்வதற்கு கம்பீரமானதாகவும் அந்த மொழியின் மீது ஒரு பிடிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தும் என்பது மறைபொருளாக இருந்தபோதிலும், இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவறும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**1. க்ஷுத், த்ருர்த், ஆஷா; குடும்பின்ய மயி ஜீவதி ந அன்யகா;**
**தாஸாம் ஆஷா மஹாஸாத்வீ கதாசித் மாம் ந முஞ்சதி**

பொருள் : பசி, தாகம், ஆசை இம்மூன்றும் மனிதனின் மூன்று மனைவிகள்; அவன் மறையும் வரை இம்மூன்றும் அவனைப் பிரியாது. அதிலும் ஆசை என்பவள் 'மிகப் பொறுமைசாலி' ஒரு போதும் அவனைப் பிரியமாட்டாள்.

**2. குலஸ்யார்த்தே த்யஜேதேகம் க்ராம்ஸ்யார்த்தே குலம்த்யஜேத்**
**க்ராம் ஜனபதஸ்யார்த்தே ஆத்மார்த்தே ப்ருதிவீம் த்யஜேத்**

பொருள் : உன் சுய விருப்பத்தைக் குடும்பத்துக்காகவும், உன் குடும்பத்தை உன் ஊருக்காகவும், உன் ஊரை உன் நாட்டுக்காகவும் தியாகம் செய்யலாம். உன் ஆத்மாவுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யலாம்.

**3. தாரணாத் தர்மமித்யாஹு:தர்மோ தாரயதே ப்ராஜா:**
**யஸ்யாத் தாரணஸம்யுக்தம் ஸ தர்மோ அதிநிஷ்சய;**

பொருள் : 'தாரணா' எனும் சொல்லில் இருந்து பிறந்தது தர்மம்; தர்மமே சமுதாயத்தை இணைக்கிறது. ஆக, எந்த ஒன்று சமுதாயத்தைச் சேர்த்துப் பிணைக்குமோ அதெல்லாம் நிச்சயம் தர்மமே.

தொடரும்....

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

என்றும் ஆன்மீக பணியில் :
**பிரம்மஸ்ரீ முனிஸ்வர ஸாஸ்திரிகள்**
ஸ்தாபகர் ஸ்ரீ வித்யா ஸ்தானம் ட்ரஸ்ட், சென்னை.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாயா,
ஓம் நமோ நாராயணாயா.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 1



ஒரு மதம் மறைந்து போகாமல் இருக்கவும் மாறிப் போகாமல் இருக்கவும் அதன் "சாஸ்திரம்" இன்றியமையாதது. சாஸ்திரம் இல்லாத மதம் விரைவில் அழிந்து போய்விடுகிறது. சாஸ்திரத்தை பற்றுக்கோலாக கொண்ட மதம் என்றும் அழிவில்லாமல் இருக்கிறது. உலகில் உள்ள முக்கிய மதங்களில் ஒன்றான கிறிஸ்துவ மதத்திற்கு சாஸ்திரம் "பைபிள்", அடுத்து இஸ்லாமிய மதத்திற்கு சாஸ்திரம் "குர் ஆன்", இதுபோல் புத்த மதத்திற்கு சாஸ்திரம் "தம்மபதா" என்பார்கள். ஆனால் நம்முடைய இந்து மதத்திற்கான சாஸ்திரம் எது என்றால் பலவிதமான விடைகள் வரும், காரணம் நம்முடைய இந்து மதத்தில் கணக்கற்ற சாஸ்திரங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த சாஸ்திரங்களுக்கெல்லாம் மூலம் நம்முடைய வேதங்கள்தான். கால போக்கில் வேதங்களின் பல பகுதிகள் மறைந்து போய்விட்டன. ஆனால் அந்த வேதங்களிலிலிருந்து எடுத்த "உபநிஷதங்கள்" நன்கு காப்பாற்றப்பட்டுள்ளன. உப நிஷதங்களின் கருத்துக்களை தெளிவுபட விளக்குவதுதான் "பகவத் கீதை". கீதையைப் படித்தால் உபநிஷதங்கள் அனைத்தையும் படித்த பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை. உபநிஷதங்கள் பசுக்கள் என்று வைத்துக்கொண்டால் பகவத் கீதையை அவற்றில் பால் என்று கூறலாம், "ராமாயணம்" "மஹாபாரதம்" ஆகிய இரண்டு இதிகாசங்களும் நம்முடைய பாரத தேசத்தின் ஒப்பற்ற இதிகாசங்கள். இவற்றில் "வேத வியாசர்" இயற்றிய மகா இதிகாசமாகிய மஹாபாரதத்தில்தான் இந்த "பகவத் கீதை" வருகிறது. "இதி + ஹாசம்" என்றால் "இது நடந்தது" என்று ஒரு பொருள் உண்டு.

**பகவத் கீதை எப்படி உருவானது?**

பஞ்சபாண்டவர்கள் சூதாட்டத்தில் துரியோதனனிடம்



எல்லாவற்றையும் இழந்துவிட துரியோதனன் அவர்களை நாட்டைவிட்டு விரட்டிவிடுகிறான். அதன் காரணமாக பாண்டவர்கள் பன்னிரெண்டு ஆண்டுகள் வனவாசமும் ஓர் ஆண்டு அஜ்ஞாத வாசமும் இருந்துவிட்டு திரும்பி வந்து தங்கள் நாட்டைத் திரும்பத் தருமாறு கேட்டு ஸ்ரீ கிருஷ்ணனை தூது அனுப்பினார்கள். ஆனால் துரியோதனன் ஒரு ஊசியை நாட்டுவதற்குக்கூட இடந்தர முடியாது என்று கூறிவிட்டான். இதனால் இருவருக்கும் போர் மூளக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது. துரியோதனனும் அர்ஜுனனும் யுத்தத்திற்கு கண்ணனின் உதவியை கேட்க துவாரகைக்குப் போனார்கள். அவர்கள் சென்ற நேரம் கண்ணபிரான் நித்திரையில் இருந்ததால் துரியோதனன் கண்ணனின் தலைப்பக்கமும் அர்ஜுனன் கண்ணனின் கால்பக்கமும் காத்திருந்தார்கள். பகவான் கண்விழித்ததும் அவருடைய கால்பக்கம் அமர்ந்திருந்த அர்ஜுனன் அவருடைய பார்வையில் முதலில் பட்டான். அவருடைய விருப்பப்படி போரிலே அர்ஜுனனுக்கு உதவியாக இருப்பதாக பகவான் கூறினார். இதைக்கேட்டு பதட்டம் அடைந்த துரியோதனன் தனக்கும் உதவவேண்டும் என்று கண்ணனிடம் கேட்டான். அதற்கு பகவான் "துரியோதனா நிராயுதபாணியாக வரப்போகும் நான் வேண்டுமா அல்லது என்னுடைய சேனைகள் வேண்டுமா?" என்று கேட்க "எனக்கு சேனைகளே போதும்" என்று கூறிவிட்டான். ஆனால் அர்ஜுனன் பகவான் உற்ற துணையாக தன்பக்கம் இருந்து வழிகாட்டினால் போதும் என்று கூறிவிட்டான். பகவானும் அர்ஜுனனுக்கு தேரோட்டியாக இருக்க சம்மதித்துவிட்டார். "குருக்ஷேத்திரம்" என்னும் இடத்திலே கௌரவர்கள் சேனைகளும் பாண்டவர்கள் சேனைகளும் போருக்குத் தயாராக நிற்கின்றன.

(குருக்ஷேத்திரத்திற்கு 'தர்மக்ஷேத்ரம்'' என்ற பெயரும் உண்டு. கீதையின் முதல் ஸ்லோகமே ''தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே...'' என்றுதான் ஆரம்பிக்கும். (தற்போதைய இந்தியாவில் முதலில் இந்த "குருக்ஷேத்திரம்" என்ற இடம் "பஞ்சாப்" மாநிலத்தில் இருந்தது. ஆனால் தற்போது 'ஹரியானா' மாவட்டத்தில் உள்ளது.

தொடரும்....

**டி.சூரியநாராயணன்**

## புதுச்சேரி வேதபாரதி (திருமீயச்சூர்) பயணக் கட்டுரை

*விளம்பி வருடம் பங்குனி மாதம் பௌர்ணமி 20.03.2019 அன்று நாங்கள் புதுவை வேத பாரதி சார்பாக திருமீயச்சூர் சென்றோம். மூன்று பேருந்துகளில் நாங்கள் 92 பேர் காலை 5.30 மணியளவில் புதுச்சேரி சங்கர வித்யாலயா பள்ளியிலிருந்து புறப்பட்டுச் சென்றோம்.*

*போகும் வழியில் கடலூரில் உள்ள ஒரு கல்லூரியில் சிற்றுண்டி ஏற்பாடு செய்யபட்டிருந்தது. சிற்றுண்டி சாப்பிட்ட பிறகு நாங்கள் திருமீயச்சூரை நோக்கி பயணித்தோம். காலை 10.00 மணியளவில் திருமீயச்சூர் ஸ்ரீ லலிதாம்பிகை கோயிலை சென்றடைந்தோம். அம்பாளுக்கு அபிஷேகங்கள் நடை பெற நாங்கள் "ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம" அர்ச்சனை செய்தோம். நாங்கள் எடுத்து சென்ற 1008 தாமரை புஷ்பங்களால் அர்ச்சகர் அம்பாளுக்கு அர்ச்சனை செய்ய லக்ஷார்ச்சனை சிறப்பாக முடிந்தது. பெண்கள் எல்லோருக்கும் நாங்கள் தாம்பூலம் மற்றும் அர்ச்சனை பிரசாதமான குங்குமமும் வழங்கினோம். மதிய உணவு கோயிலில் உள்ள சிறு மண்டபத்தில் வழங்கப்பட்டது. உணவு அருந்திய பின் சிறிது இளைப்பாறிய பின்னர் நாங்கள் மீண்டும் பயணத்தை தொடர்ந்தோம்.*

*மாலை 4.00 மணியளவில் வைத்தீஸ்வரன் கோவிலை சென்றடைந்தோம். அங்கு ஒரு மண்டபம் எங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.*

*அங்கு சிற்றுண்டி அருந்திய பின் நாங்கள் வைத்தீஸ்வரன் கோயில் சென்று சுவாமி தரிசனம் செய்தோம். அதன் பின்னர் சிதம்பரம் சென்று நடராஜரை கண்குளிர தரிசனம் செய்தோம். சிதம்பரத்தில் ஒரு சிறிய மண்டபத்தில் இரவு டிபன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 8.30 மணியளவில் அங்கிருந்து கிளம்பி புதுச்சேரியை நோக்கி சென்றோம். மனதுக்கு மிகவும் நிறைவாக இருந்தது. இது போன்ற ஆன்மீக பயணங்களுக்கு செல்ல வேண்டும் என்ற ஆசை மனதில் மேலும் மலர நாங்கள் எல்லோரும் அவரவர் வீட்டை வந்தடைந்தோம். இந்த ஏற்பாடுகள் அனைத்தையும் மிகவும் சிறப்பாக செய்த திரு.ரமேஷ், திரு.பட்டாபிராமம், திரு.ரவி மற்றும் திரு.சீதாராமன் ஆகிய வேத பாரதி உறுப்பினர்களுக்கு நன்றி.*

*- புதுவை வேதபாரதி.*



*ஜெய ஜெய சங்கர!!! ஹர ஹர சங்கர!!!*

## ஜகத்குரு ஸ்ரீ ஆதி சங்கரரின் ஜயந்தி
## 10.05.2019, வெள்ளிக்கிழமை

**ச்ருதி ஸ்ம்ருதி புராணானாம் ஆலயம் கருணாலயம்**
**நமாமி பகவத்பாத சங்கரம் லோக சங்கரம்.**



"ச்ருதி" எனப்படும் வேதங்களுக்கும், "ஸ்ம்ருதி" எனப்படும் சாஸ்திரங்களுக்கும், புராணங்களுக்கும் இருப்பிடமானவரும், கருணா மூர்த்தியும், உலகம் முழுவதற்கும் மங்களத்தை அருளுபவருமான சங்கர பகவத் பாதரை நமஸ்கரிக்கிறேன்.

ஜகத்குரு ஸ்ரீ ஆதி சங்கரபகவத்பாதர் இந்த உலகத்தில் அவதரிக்காமல் இருந்திருந்தால் இன்று நாம் "இந்து மதம்" என்ற பெருமை பட்டுக்கொள்ள ஒன்றும் இருந்திருக்காது. இன்று இந்துமதத்தின் அடித்தளமே அவர்தான்.

ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதாள் "கணேச பஞ்சரத்னத்தில்" ஆரம்பித்து அநேக பஞ்சரத்னங்கள், அஷ்டகங்கள், புஜங்கங்கள், ஸ்தோத்ரங்கள் ஸ்துதிகள் இயற்றியுள்ளார். பத்து உபநிஷத்துகள், பிரம்மசூத்திரம், பகவத் கீதை, விஷ்ணு ஸஹஸ்ரநாமம் ஆகியவற்றுக்கு பாஷ்யம் எழுதியுள்ளார். இவை இல்லாமல் விவேக சூடாமணி, சிவானந்த லஹரி, சௌந்தர்ய லஹரி, ஆனந்த லஹரி ஆகியவற்றை இயற்றியுள்ளார். பாரதம் பூராவும் உள்ள எந்த கோயிலுக்குப் போனாலும் அங்கு ஆதி சங்கரர் விஜயம் செய்து ஒரு ஸ்தோத்ரம் எழுதியிருப்பது தெரியவரும்.


ஸ்ரீராமர் வாழ்ந்து காட்டியது போல் வாழ வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் கூறியது போல் நடக்க வேண்டும் என்று சொல்வார்கள். அதே போல் நாம் ஒவ்வொருவரும் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் அவர்களின் அவதார தினமான வைசாக சுக்ல பஞ்சமி நாளை வருடா வருடம் கொண்டாடி அவருடைய ஸ்தோத்ரங்களை தினமும் பாராயணம் செய்து அவர் க்ரந்தங்களில் கூறியுள்ள உயர்ந்த தத்துவங்களின்படி நம்முடைய வாழ்க்கையை வாழ்ந்தால் நமக்கு பக்தியும் ஞானமும் வரும்.

ஜய ஜய சங்கர.... ஹர ஹர சங்கர

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

# நடத்தையிலும் மனநிலையிலும் சமமாய் இருத்தல்



சென்றமாத தொடர்ச்சி...

எவர் ஒருவர் பல்வேறு மனிதர்களிடத்திலும் மற்றும் பல்வேறு சூழ்நிலைகளிலும் செய்யத் தகாதவைகளைத் தவிர்த்தும், செய்யப்பட வேண்டியவைகளைச் செய்தும் தனது தர்மத்தைத் தொடர்ந்து அனுஷ்டித்து வருகின்றாரோ, அவருடைய நடத்தையில் நிச்சயமாக ஒரு சமத்துவம் குடிகொண்டிருக்கும். அப்படிப்பட்ட சமத்துவம் வாய்ந்தவனின் நடத்தையானது, பலவித ரசனைகளைக் கொண்ட பார்வையாளர்களை ஒரே மாதிரி மகிழ்விக்கும். நாட்டிய நாடகத்தைப் போலவும் மற்றும் தன்னுடைய விருந்தினர்கள் அனைவரையும் ஒரே மாதிரி திருப்தி செய்விக்கும் விருந்தளிப்போனைப் போலவும் உள்ளது எனலாம்.

பொதுவாக ஒருவனுடைய மனம் பலவிதமான விருப்பு வெறுப்புகளால் நிரம்பியிருக்கும். ஆசையினாலும், வெறுப்பினாலும் உந்தப்பட்டவர்கள், அதர்ம மார்க்கத்தில் வழிதவறிச் சென்று விடுகிறார்கள். துரியோதனனின் மேல் வைத்த பாசமானது திரதராஷ்டரரின் கண்களை மறைத்ததால், விதுரர் கூறிய பயனுள்ள அறிவுரைகளை அவரால் கடைப்பிடிக்க முடியாமல் போய்விட்டது. துரியோதனனும், பீமனும் சிறுவர்களாய் இருந்த போதும், பீமனின் மேல் ஏற்பட்ட



வெறுப்பினால், அவனது உயிரைப் பறிக்க முயற்சித்தான் துரியோதனன். எனவே, ஒருவனுடைய நடத்தையில் உண்மையான சமத்துவம் ஏற்படுவதற்குத் தடைகளாக இருப்பவை அவனுடைய விருப்பு வெறுப்புகளே ஆகும்.

இத்தகைய விருப்பு, வெறுப்புகளை ஒருவன் தன்னிடத்திலிருந்து நீக்கிவிட்டால், அவனுடைய மனநிலையில் சமத்துவம் மிளிரும்; அப்படிப்பட்டவன், நட்பைப் பாராட்டுவோரிடம் பற்றுதலும் வைக்க மாட்டான். கோபப்படுபவர்களை வெறுக்கவும் மாட்டான். பற்றுதலிலிருந்தும், துவேஷத்திலிருந்தும் விடுபட்ட ஒருவன், தர்ம நெறியிலிருந்து எப்பொழுதும் வழுவாமல் இருப்பான்; அவனுடைய நடத்தையில் சமத்துவம் இருக்கும். நடத்தையில் சமத்துவத்தை அடைவதுதான் ஒரு முக்கியமான படி. பிறகு, அதுவே அவனை மனநிலையில் சமத்துவத்தை அடைவதற்கு வழிகோலும். ஆகையால், மனதில் உள்ள சமநிலைக்கும் வெளிநடத்தையில் காணப்படும் சமத்துவத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு.

- தொடரும்...

வேதபாரதி இதழில் வரும் கட்டுரைகள் குறித்தும், செய்திகள் குறித்தும் வாசக அன்பர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கடிதங்கள் மூலமாகவோ அல்லது ஈ மெயில் மூலமாகவோ தெரிவித்தால் நல்ல ஆலோசனைகளை ஏற்று இதழை இன்னும் சிறப்பாக வெளியிட எங்களுக்கு ஏதுவாக இருக்கும். உடனே உங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

**வேதபாரதி - ஆர். வெங்கட்ராமன்**

*எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு, பேபி நகர்,*
வேளச்சேரி, சென்னை – 600 042.

Cell : 94434 95950
Email - vedabharathichennai@gmail.com

*ஸ்ரீ குருப்யோ நம:*

# மஹா பெரியவா ஜெயந்தி

*நாம் யாவரும் அறிந்ததே, 19.05.2019 மஹா பெரியவா ஜெயந்தி. அவர் நமக்கு கொடுத்துள்ள கடல் போன்ற சனாதந தர்ம தத்துவங்களில் ஒரு சிலவற்றை நினைவூட்டுவோம். மஹா பெரியவா உபன்யாசத்திலிருந்து ஒரு சில துளிகள் “அஹிம்சை” என்னும் தலைப்பில் இருந்து சில துளிகள். எல்லோரிடத்திலும் நாம் மிக அன்பாக இருக்க வேண்டும். சர்வ கஷ்டங்களையும் நிவர்த்தி பண்ணுவதற்காகப் பரிபூர்ணமான பிரேமை வேண்டும். வேதத்தை ரக்ஷிக்க வேண்டியவன் பொய் சொல்லக்கூடாது, புலால் உண்ணக் கூடாது, கப்பல், விமானம் ஏறி வெளிநாட்டுக்குப் போகக் கூடாது. அந்நாட்டு பழக்க வழக்கங்களில் ஈடுபடக்கூடாது. அந்த பழக்க வழக்கங்களை இங்கே கொண்டு வந்து மந்திர ஸான்நித்யத்துடன் கூடிய பொறுப்பு ஏற்பட்டிருக்கும். தன் ஸ்வஜாதி பந்துக்களிடம் கலக்கும் படி செய்யக் கூடாது. இப்படி அவனுக்கு அநேக தர்மங்கள் இருக்கின்றன. “நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மாம்மழை” என்றார்கள். பூர்ணமாக நல்லான் ஒருவன் இருந்தால் போதும் அதற்காகத்தான் அவரவர்கள் கொள்கைப்படி அவரவர்கள் இருக்க வேண்டும் என்பதை நம் மதத்தில் வற்புறுத்துகிறார்களே தவிர, எல்லோரும் ஒரு கொள்கையைத்தான் பின்பற்ற வேண்டும் என்று சொன்னது இல்லை. ஒவ்வொருவனும் அவனுடைய வர்ணத்திற்குரிய கர்மாவில் கண்ணும் கருத்துமாக இருந்தால் எல்லா தர்மங்களும் உயர்ந்த கொள்கைகளும் காப்பாற்றப்படும். எத்தனை தான் பிறருடைய தர்மம் உயர்வானதாக இருந்தாலும், நம்முடைய தர்மம் கீழானதாக இருந்தாலும், நம்முடைய சுபாவமான தர்மத்தை அனுஷ்டிப்பது தான் பிறருடைய தர்மத்தைக் காட்டிலும் மேன்மை என்கிறார்.*

*“ஸ்ரேயாந் ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்*
*ஸ்வநுஷ்டிதாத்” (கீதை 18:47) .......*

*அவனவன் எந்த எந்த தர்மத்தில் இருக்கிறானோ அந்த அந்த தர்மத்தை காமம், கோபம் இல்லாமல் செய்ய வேண்டும் என்பது கீதை உபதேசம். இப்படிச் செய்தால் உயர்ந்த பலன், உயர்ந்த கொள்கைகள் அவனிடத்தில் உண்டாகிவிடுகின்றன. ஆகவே நம்முடைய கர்மாக்களை நாம் பண்ண வேண்டும். பண்ணி நம்முடைய புத்தியைச் சுத்தமாக்கிக் கொண்டு சதா அழிவில்லா ஒரு வஸ்துவிடத்தில் பிரியம் வைத்து உண்மையான ஆனந்தத்தை பரம்பொருளை அடைய வேண்டும்.*

-தொகுப்பு : **ஆதனூரான்**



Ithu Namma Dharmasala இது நம்ம தர்மசாலா Ithu Namma Dharmasala இது நம்ம தர்மசாலா

## இது “நம்ம” தர்மசாலா

ஏழை புற்றுநோயாளிகளின் இலவச புகலிடம்



சென்னை, அடையாறு கேன்சர் ஆஸ்பத்திரி தாங்கள் கட்டி முடித்த ஒரு இலவச தர்ம சாலாவை, தாங்களாக நடத்த முடியாமல், காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளை அணுகி ப்ரார்த்தனை செய்ததன் பேரில், ஸ்ரீ காஞ்சி பெரியவரின் அருளாணைப்படி, ஸ்ரீ மாதா டிரஸ்ட் அந்த பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டு இன்றுவரை எந்த தொய்வும் இன்றி நடத்தி வருகிறது என்பது சாதனை படைக்கும் வரலாறு.

நல்ல உள்ளம் படைத்த நன்கொடையாளர் களின் பங்களிப்பு மிகவும் போற்றத்தக்கது. இவர்களின் நிதி உதவியை ஆதாரமாக கொண்டு கடந்த 19 வருடங்களாக ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகித்து வரும் இந்த தர்மசாலாவில் இதுவரை 6.5 லட்சத் திற்கும் அதிகமான ஏழை புற்றுநோயாளிகள் சுகாதாரமான இலவச தங்கும் வசதியும், சுவையான இலவச உணவும் பெற்றதினால், முறையான சிகிச்சை கிடைக்கப் பெற்று புற்றுநோயின் கொடுமையில் இருந்து மீண்டு வந்திருக் கிறார்கள். இந்த மாபெரும் சாதனை எந்த ஒரு தனி மனிதருக்கும் உரித்தானது அல்ல; நம் எல்லோருடைய ஒத்துழைப்பினால் மட்டுமே இத்தகைய மனிதநேய செயல்பாடு இங்கு அரங்கேறியுள்ளது.

### இன்றைய நிலை - 20 ஏப்ரல் 2019

கடந்த காலங்களில் தங்களால் முடியவில்லை என்று நமது உதவியை நாடிய கேன்சர் ஆஸ்பத்திரி நிர்வாகம், நமது 19 வருட கால அயராத உழைப்பின் பயனால் வானளாவ உயர்ந்து நிற்கும் தர்மசாலாவை, ஒரு பெரிய தனவந்தரின் உதவி கிடைத்த உடன் தாங்களாகவே நிர்வகிக்க முடியும் என்று முடிவு செய்துள்ளனர். இதன்படி இந்த நான்கு மாடி கட்டடம் அவர்கள் கட்டுப்பாட்டில் வந்ததும், ஏழை புற்று நோயாளிகளின் பயன்பாட்டுக்கு மட்டுமல்லாமல், தேவையான அளவிற்கு மற்ற பயன்பாடுகளுக்கும் அவர்களது விருப்பப்படி மாற்றுவதற்கு ஒரு பெரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. ஏனெனில், நாம் தற்பொழுது ஏழை புற்றுநோயாளிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் கொடுத்து வரும் இதர சலுகைகளை ஆஸ்பத்திரி

இது நம்ம தர்மசாலா Ithu Namma Dharmasala இது நம்ம தர்மசாலா Ithu Namma Dharmasala

Ithu Namma Dharmasala இது நம்ம தர்மசாலா Ithu Namma Dharmasala இது நம்ம தர்மசாலா

நிர்வாகம் நிச்சயம் தரமாட்டார்கள். **இதனால் பாதிக்கப்படப்போவது என்னவோ ஒரு பாவமும் அறியாத துன்பத்தில் இருக்கும் ஏழை புற்றுநோயாளிகள்தான்!**

கேன்சர் ஆஸ்பத்திரி நிர்வாகத்தில் பெரிய பொறுப்பில் இருக்கும் ஒரு மார்வாரி தனவந்தர் தனது அளவிட முடியாத செல்வத்தை ஆதாரமாகக் கொண்டே இந்த தர்மசாலாவை ஏற்று நடத்திட முன் வந்திருப்பதாகவும் தெரிகிறது. இந்நிலையில் ஆஸ்பத்திரி நிர்வாகம் கேட்டுக் கொண்டதன் பேரில் நாம் இதுவரை பொறுப்பேற்று நடத்தி வந்த தர்மசாலா கட்டடத்தை அவர்கள் வசம் ஒப்படைத்து விட்டோம். அவர்கள் இந்த ராஜஸ்தானி தர்மசாலாவை நடத்திட பொதுமக்களின் நன்கொடை, நிதி உதவி எதுவும் தேவையில்லை என்கிற மன நிலையில் பொறுப்பேற்றுள்ளனர்.

இதன் பிறகும், வரும் காலத்தில் என்றாவது ஒரு நாள், நமது ஸ்ரீ மாதா டிரஸ்ட் இந்த பணியை மீண்டும் ஏற்று நடத்தலாம் என்று திருமதி சாந்தா அம்மையார் விரும்பினால், நோயாளிகளின் நலனை கருத்தில் கொண்டு, மகிழ்ச்சியுடன் நாம் இப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகவும் கூறியிருக்கிறோம்.

இருப்பினும் சுமார் 20 வருடங்களாக ஏழை புற்றுநோயாளிகளின் நலன் காக்கும் வகையில் அவர்களது அன்றாட வாழ்வில் பின்னி பிணைந்து செயல்பட்டு வரும் நமது ஸ்ரீ மாதா டிரஸ்ட் இந்த உயரிய மனிதநேய பணியை தொடர்ந்து செய்திட உறுதி கொண்டுள்ளது. அதற்கேற்ப கேன்சர் மருத்துவமனைக்கு மிக அருகாமையில் (நோயாளிகள் சிரமம் இன்றி நடந்து வரும் தூரத்தில்) எங்களது **"நம்ம தர்மசாலா"** மே மாதம் ஒன்றாம் தேதி, புதன்கிழமை முதல் செயல்பாட்டுக்கு வருகிறது.

ஏழை புற்றுநோயாளிகளுக்கு நாங்கள் அளித்து வரும் எண்ணற்ற உதவிகள், உங்களின் நிதி உதவியால் என்றென்றும் தொடர்ந்து நடைபெறும். மேலும், புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை தினந்தோறும் அதிகரித்துக்கொண்டு வருவதும் ஒரு நிதர்சனமான உண்மையே! அதிலும் ஏழை புற்றுநோயாளிகள் ஏராளம்! ஏராளம்!! ஆதலால் **"நம்ம தர்மசாலாவின்"** பங்கு அவசியம் தேவை. நம்மைப் போன்ற அறக்கட்டளைகள்தான் ஒரு அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன், ஏழை புற்று நோயாளிகளை காத்திடும் ஒப்பற்ற சேவையை நல்ல முறையில் செயல்படுத்த முடியும். இதனை கடந்த 19 வருடங்களில் மிகவும் தெளிவாகவும், திருப்திகரமாகவும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிரூபித்துள்ளது. தமிழகத்திலிருந்து வெளிவரும் அனைத்து பத்திரிகைகளிலும் வெளிவந்த நற்சான்று விமர்சனங்களே இதற்கு சாட்சி. நீங்களும் இந்த உண்மையை ஏற்றுக் கொள்வீர்கள் என மனமார நம்புகிறோம்.

இது நம்ம தர்மசாலா Ithu Namma Dharmasala இது நம்ம தர்மசாலா Ithu Namma Dharmasala



Ithu Namma Dharmasala இது நம்ம தர்மசாலா Ithu Namma Dharmasala இது நம்ம தர்மசாலா

**ஸ்ரீ மாதா டிரஸ்ட் ஏழை புற்றுநோயாளிகளுக்கு 2000-ம் ஆண்டு முதல் உண்ண உணவும், தங்குமிடமும் அளிப்பதோடு நிறுத்திவிடாமல் இன்று வரை கீழ்கண்ட உதவிகளையும் முற்றிலும் இலவசமாக செய்து வருகிறது.**



S.Rama
Administrator

- கேன்சர் மருத்துவமனை பரிந்துரைக்கும் மருந்து, மாத்திரைகள் நாம் வாங்கி தருகிறோம்.
- புற்றுநோயாளிகளுக்கு தேவைப்படும் பரிசோதனை செலவுகளை நாமே ஏற்கிறோம்.
- தங்களது ஊருக்கு திரும்பிச் செல்ல வழியற்றோருக்கு பயண செலவுகளை தருகிறோம்.
- உழைக்கும் பெற்றோர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டால், ஏழைக் குழந்தையின் படிப்பு என்னாவது? அக்குழந்தையின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு கல்விக்கான செலவுகளை ஏற்கிறோம்.
- ஒரு குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடியவருக்கு காலத்தின் கோலத்தால் புற்றுநோய் வந்துவிட்டால் அக்குடும்பம் பட்டினியால் வாடக்கூடாதல்லவா? அதனால், அக்குடும்பத்திற்கு தேவையான குறைந்தபட்ச பணத் தேவையை பூர்த்தி செய்து வருகிறோம்.
- ஏழை புற்றுநோயாளிகளும் பண்டிகை நாட்களில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் அல்லவா? அவர்கள் அனைவருக்கும் பொங்கல், தீபாவளி தினங்களில் புத்தாடையும், விருந்து உணவும் வழங்குகிறோம்.

**ஸ்ரீ மாதா டிரஸ்ட் ஏழை புற்றுநோயாளிகளுக்கு மட்டுமல்லாமல், சமூகப் பொறுப்புடன் இன்னும் பல சேவைகளை செய்து வருகிறது. அவற்றில் சில...**



A.American
P. R. O.



S. Jawahar
All-rounder

- அசோக் நகரில் உள்ள ஸ்ரீ வசந்தா மெமோரியல் டிரஸ்ட் மூலமாக, வசதியற்ற தாய்மார்களுக்கு இலவச மேமோகிராம் பரிசோதனைக்கு உதவுகிறோம். இதன் மூலம் மார்பக புற்றுநோய் ஆரம்ப நிலையில் கண்டறியப்பட்டு எண்ணற்ற தாய்மார்கள் உரிய சிகிச்சை மேற்கொண்டு குணமடைந்து வருகிறார்கள்.
- சிறுநீரக கோளாறினால் அவதியுறும் ஏழை எளியோர், தாம்பரம் ஹிந்து மிஷன் ஆஸ்பத்திரியில் இலவச டயாலிசிஸ் செய்துகொள்ள ஏற்பாடு செய்துள்ளோம்.
- பசு பராமரிப்பு மையங்களுக்கு தேவையான மாட்டுத் தீவனம் தவறாமல் வழங்கப்படுகிறது.
- கலவையில் உள்ள இலவச முதியோர் இல்லத்தில் தங்கி வாழ்ந்து வரும் முதியவர்களை பராமரிக்கும் பொறுப்பை ஒரு பிள்ளையின் ஸ்தானத்தில் இருந்து ஏற்றுக் கொண்டுள்ளோம்.
- கொடிய நோயின் காரணத்தால் பெற்றோர்களை இழந்த ஆதரவற்ற ஏழை மாணவ, மாணவியருக்கு நிதி உதவி அளித்து அவர்தம் படிப்பு தொடரவும், எதிர்காலம் சிறக்கவும் வழிவகை செய்து தருகிறோம்.

இது நம்ம தர்மசாலா Ithu Namma Dharmasala இது நம்ம தர்மசாலா Ithu Namma Dharmasala

Ithu Namma Dharmasala இது நம்ம தர்மசாலா Ithu Namma Dharmasala இது நம்ம தர்மசாலா

**ஸ்ரீ மாதா டிரஸ்டின் சேவையைப் பற்றி பத்திரிகைகளில் வெளி வந்த விமர்சனங்களின் தலையங்கம்**

| | | | |
|---|---|---|---|
| **ஸ்ரீ சாய் மார்க்கம்** மதசார்பற்ற மனிதாபிமானம் | **நம் உரத்த சிந்தனை** ஏழை புற்றுநோயாளிகளுக்கு அடைக்கலம் தரும் ஸ்ரீ மாதா டிரஸ்ட் | **குமுதம் சிநேகிதி** கேன்சர் நோயாளிகளுக்கு இலவச ஹாஸ்டல் | **காமகோடி** கருணையின் மனித உருவம் மாதா டிரஸ்ட் கிருஷ்ணமூர்த்தி |
| **கல்யாண மாலை** மனதெல்லாம் நிறைந்த மாதா இவர் | **லேடீஸ் ஸ்பெஷல்** ஏற்றமிகு சேவையில் ஸ்ரீ மாதா | **NEWS TODAY** Trust'em to take care of the Cancer-afflicted | **THE HINDU** A Trust that mothers cancer patients |
| **கல்கி** வலியைத் துரத்தும் புன்னகை | **மாலைச்சுடர்** புற்றுநோயாளிகளுக்கு புனித தொண்டு | **Adyar TALK** Mother of all services | **குமுதம் ஜோதிடம்** மரணத்தை வெல்லும் மாபெரும் பணி |
| **அமுதசுரபி** தொண்டின் மறுபெயர் ஸ்ரீ மாதா டிரஸ்ட் | **தினகரன் வசந்தம்** கடவுளின் சகோதரர்கள் | **ஞான ஆலயம்** ஸர்வே ஜனா சுகினோ பவந்து | **குமுதம் பக்தி** கேன்சர் துயர் தணிக்கும் தர்மசாலை |
| **கோகுலம் கதிர்** உதவி செய்யறதுக்கும் அதிர்ஷ்டம் இருக்கணும் | **கலைமகள்** இம்மைக்கும் மறுமைக்கும் வழி பிறக்கும் | **தேவதை** அன்புதான் குணப்படுத்தும் | **இலக்கிய பீடம்** அவர்கள் கண்ணீரைத் துடையுங்கள் |
| **புதிய தலைமுறை** நோய் தீர்க்கும் இன்னொரு தாய்மடி | **பாபாஜீ ஆன்மீகம்** தொண்டும் தெய்வீகம்தான் | **விஜயபாரதம்** மாதா டிரஸ்டின் புனித தொண்டு ... இதுதான் இறைவனுக்கான ஆராதனை | **ஹிந்து மித்ரன்** மனிதம் மகிழ்வுடன் மலர்கிறது |

நிதி உதவி செய்ய விரும்பும் அன்பர்களுக்காக **ஸ்ரீ மாதா டிரஸ்டின்** வங்கி விபரங்கள்:

Account Name : SRI MATHA TRUST Bank Name :INDIAN OVERSEAS BANK
Branch : Gandhi Nagar, Chennai-20. Current A/c No. : 163502000001090
IFSC Code: IOBA0001635



Donations to our Trust is exempted U/S.80 (G) of the Income Tax Act. After doing this benevolent act kindly SMS your postal mailing address or kindly e-mail the donation details to enable us send our receipt.



P.AKASHRAM
Executive Trustee

**SRI MATHA TRUST**

BHAMA VENKAT
Finance Trustee

Admin Office: 95/6, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, [Opp. to Thirukkural Unavagam] Adyar, Chennai-20. Tel: 044 2442 0727
Mobile: 9444001065 / 9381020727 / 9003247857
Email : vkrishnamoorthy.smt@gmail.com

Namma Dharmasala : 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Near IIT Compound, Chennai-113.
Regd. Office: NATHA KAMALAM,1-A, Periyazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai-59.

இது நம்ம தர்மசாலா Ithu Namma Dharmasala இது நம்ம தர்மசாலா Ithu Namma Dharmasala




## 30.01.2019 பாண்டிச்சேரி சிறப்பு நிகழ்ச்சி

பாண்டிச்சேரி மக்கள் வருடம் தோறும் நடத்திவரும் ”பிக்ஷா வந்தனம்“ நிகழ்ச்சி இந்த ஆண்டு 30.01.2019 அன்று சிறப்பாக நடைபெற்றது. அன்று அதிகாலை 5 மணியளவில் பாண்டிச்சேரியிலிருந்து ஒரு பேருந்தில் பக்தர்கள் எல்லோரும் காஞ்சி புறப்பட்டு சென்றோம். பாண்டிச்சேரி “சங்கர வித்யாலயா” பள்ளியில் காலை காபி பக்தர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிறகு “சங்கர வித்யாலயா” பள்ளியில் இருந்து பேருந்து கிளம்பியது. போகும் வழியில் சிற்றுண்டி வழங்கப்பட்டது. காலை 9.30 மணியளவில் நாங்கள் காஞ்சிபுரம் சென்றடைந்தோம். பிக்ஷா வந்தனத்திற்காக எடுத்துச் சென்ற அரிசி, காய்கறிகள் மற்றும் பழங்களை மடத்தில் சமர்ப்பித்தோம். அங்கு பெரியவா ஸ்ரீ ஸ்ரீ விஜேயந்திர சரஸ்வதி சுவாமிகள் சந்திர மௌலிஸ்வர பூஜை செய்து கொண்டிருந்தார்கள். அனுஷத்திற்கான சிறப்பு பூஜைகளும் அங்கு நடைபெற்று கொண்டு இருந்தது. சிறிது நேரம் பூஜையை பக்தி ச்ரத்தையோடு கண்டு களித்து விட்டு பின் காஞ்சி காமாட்சி அம்மனை தரிசிக்க சென்றோம். இனிதே தரிசனம் கிடைத்தது. பின்னர் மடத்தில் பிக்ஷா வந்தனம் நடைபெற்றது. பெரியவா ஸ்ரீ ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார். பின்பு மடத்திலேயே நாங்கள் மதிய உணவு அருந்தினோம். சிறிது நேரம் கழித்து நாங்கள் அனைவரும் “ஓரிக்கை” என்ற இடத்திற்கு சென்றோம். அங்கு மஹா பெரியவா ஸ்ரீ ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி அவர்களின் மணிமண்டபம் அமைந்துள்ளது. அதை தரிசித்த பிறகு நாங்கள் தென்னாங்கூர் சென்றோம். பாண்டுரங்கனை மனம் குளிர தரிசனம் செய்த பின் நாங்கள் பாண்டிச்சேரிக்கு திரும்பினோம். இது ஒரு இனிமையான அனுபவமாக இருந்தது.

இந்த பிக்ஷா வந்தனத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்த “வேதபாரதி” யின் நிர்வாகிகளுக்கு நன்றி.

-வேதபாரதி, புதுச்சேரி

## பஞ்சாங்க படணம்
## ஊரப்பாக்கம் மற்றும் கூடுவாஞ்சேரி சிறப்பு நிகழ்ச்சி

*ஊரப்பாக்கம் மற்றும் கூடுவாஞ்சேரி பகுதிகளின் "வேதபாரதி" அமைப்பின் சார்பாக "விகாரி" வருஷ பஞ்சாங்கம் வாசிக்கும் நிகழ்ச்சி சித்திரை 1 (14.04.2019) அன்று நடைபெற்றது. அவ்வமயம் மன்னை ஸ்ரீ சுப்ரமணிய சாஸ்த்திரி அவர்கள் "விகாரி" வருட பஞ்சாங்கம் வாசித்து ஆதாய மற்றும் விரய பலன்களையும் அதற்கு உண்டான பரிகார வழிபாட்டு முறைகளையும் விவரித்தார்.*

*முன்னதாக ஸ்ரீ கணபதி பூஜையுடன் தொடங்கிய நிகழ்ச்சியில் செல்வி.மதுமிதா இறைவணக்கம் இசைக்க வேதபாரதியின் பகுதி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். நிகழ்ச்சியில் "வேதபாரதி" அமைப்பை பற்றியும் அதன் செயல்பாடுகள் மற்றும் நமது குலத்தினர்கள் வளர்ச்சிக்காக நாம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து மன்னை ஸ்ரீ இரா. நாராயணசுவாமி அவர்கள் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். நிகழ்ச்சியில் சமஸ்கிருத பண்டிட் திரு.ராமன் அவர்கள் பங்கேற்று சமஸ்கிருத வகுப்புகளை தொடங்குவது தொடர்பாக எடுத்துரைத்தார்.*

*விழாவில் பார்வையாளராக "வேதபாரதி" மத்திய குழு ஆர்வளர் நங்கநல்லூர் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி பங்கேற்று சிறப்பித்தார்கள். இறுதியாக இப்பகுதி வேதபாரதி செயல்வீரர் திரு. சந்திரசேகர் அவர்கள் நன்றி கூற பிரசாதம் வழங்கப்பட்டு விழா இனிதே நிறைவு பெற்றது.*



*- ஆசிரியர்*



உ
குருவே சரணம்

# வேதபாரதி
(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

# ஸந்த்யா வந்தன பயிலரங்கம்

**நாள் : 24, 25 ,26 மே 2019 வெள்ளி, சனி, ஞாயிறு**
**இடம் : ஸ்ரீ விட்டல் ருக்மணி ஸமஸ்தான் வளாகம், கோவிந்தபுரம்**

1. உபநயனம் ஆன அந்தண சிறுவர்கள், பெரியவர்கள் கலந்து கொள்ளலாம்.
2. 23.05.2019 வியாழன் இரவுக்குள் கோவிந்தபுரம் வரவேண்டும்.
3. முன்பதிவு அவசியம்.
4. தங்குமிடம், உணவு, பாதுகாப்பு ஏற்பாடு உண்டு
5. மூன்று நாட்களும் தங்க வேண்டும்.
6. எல்லா ஸாகைகளுக்கும் ஆசிரியர்கள் உண்டு.
7. ஸ்மார்த்த, வைஷ்ணவ, மாத்வ, சிவாச்சார்யார் எல்லா ஸம்ப்ரதாயங்களுக்கும் வகுப்புகள் உண்டு.
8. தினசரி ஸந்த்யா வந்தனம், ஸமிதாதானம், உடற்பயிற்சி, பஜன்-யோகா, ஆன்மீகப் பெரியவர்களின் ஆசியுரை.
9. கலந்து கொள்ளும் ப்ரம்மசாரி குழந்தைகளுக்கு போக்குவரத்து செலவு ஏற்றுக்கொள்ளப்படும்.
10. கும்பகோணம் - ஆடுதுறை மார்க்கத்தில் கோவிந்தபுரம் உள்ளது.
11. தங்களுக்கு தேவையான வஸ்திரம், பஞ்சபாத்ரம், தாம்பாளம் கொண்டு வர வேண்டும்.

*முன்பதிவிற்கு :*

**9443495950 / 99949 26537**

**Email : vedabharathichennai@gmail.com**

**Team Members :**

Sri. Raviji (Sri vittal Rukmani Samasthan) - 98800 27910
Sri. Venkatesa Vathyar - 82483 82567
Sri. Ramakrishnan LIC - 99949 26537

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 2 பகுதி - 33

நேர்மறை எண்ணங்கள் உங்கள் குழந்தைகளிடம் பெருக்க, அவர்களிடம் மனக்குழப்பம் ஏற்படாமல் காத்துக் கொள்ளும் தன்மையை அதிகரிக்க வேண்டும்.

**“இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்**
**கிடும்பை படாஅ தவர்.**

*(குறள் அதிகாரம் : இடுக்கண் அழியாமை. குறள் எண்.623)*

அறிவுடையவர்கள் இடையூறுகள் ஏற்படும் பொழுது துன்பப்படாமல், தொய்வு கொள்ளாமல் இருப்பார்கள். இடையூறுகளைக் கண்டு துன்பப்படாதவர்கள், மன உறுதி கொண்டவர்கள். இவர்கள் தங்களை நோக்கி வரும் இடையூறுகளையே துன்பப்படும்படி மாற்றி விடுவார்கள் என்று வள்ளுவர் பெருமான் கூறுகிறார்.

வாழ்க்கையில் குழப்பங்கள் என்பது தொடர்கதை தான். இறுதிவரை நம்மை அது தாக்கிக் கொண்டே தான் இருக்கும். ஆனால் இன்று குழந்தைகளின் குழப்பமே வேறு கதை.

எண்ணற்றப் பொருட்கள் அவர்களை நோக்கி படையெடுக்கின்றது. உணவுப் பொருட்களில் ஆயிரம் வகை என்றால், உடைகளில் பத்தாயிரம் வகைகள்! குழப்பத்தின் முழு பிடியில் குழந்தைகளும் எதைச் செய்வது என்று புரியாமல் குழம்பும் பெற்றோர்களின் எண்ணிக்கை கூடுகிறது.

மனக்குழப்பம் என்பது எந்தச் சேனலைப் பார்ப்பது என்பதில் துவங்கி, ஒவ்வொன்றிலும் ஏற்படுகிறது. அது ஓர் அமைதியற்ற தன்மையை அளிக்கிறது என்றாலும், எதை எதிர்கொண்டு குழப்பத்தை தீர்த்துக் கொள்ளும் மனப்பாங்கையும்



அளிக்கின்றது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

பதின்பருவத்தில் ஏற்படும் குழப்பங்களுக்கு அளவேயில்லை என்பதால் அதை பெற்றோர் கண்காணிக்க வேண்டும். மேலும் மனக்குழப்பங்கள் தோன்றும் பொழுது அதை கையாளும் திறன், அதை மேலாண்மை செய்யும் திறன் ஆகியவற்றை கற்றுத்தர வேண்டும்.

அதற்கான பயிற்சிகளில் முக்கியமானது யோகக்கலை மற்றும் மூச்சுக்கலை. இதை ஒவ்வொரு யுவஸ்ரீ பயிற்சியரங்கத்திலும் யோகாச்சார்யார் திரு.சந்திரசேகர்ஜீ கற்றுத் தருகிறார்.

பொதுவா மனக்குழப்பங்கள் ஊக்குவிக்கும் தன்மையை அளிக்கின்றது என்றாலும், அதைத் தவறாக கையாளும் வேகமும் பலரிடம் உண்டு.

இந்த வயதில் மாணவ - மாணவியர்களிடம் ஒரு சுயநலம், தான் தோன்றிப் போக்குத்தனம் போன்ற குணங்கள் தோன்றுவது சகஜம் தான்.

அவர்களிடம் மனக்குழப்பத்தை மேலாண்மை செய்யும் திறனை அதிகரிக்க வேண்டும். ஓர் நிகழ்வு ஏற்படுகிறது என்றால் அதன் பின்னணியை முதலில் ஆய்வு செய்ய வேண்டும். ஏன், எதற்காக, எவ்விதத்தில், எப்படி, எங்கு மற்றும் யாரால் (What, When, Where, Why, Who and How) என்று குழப்பத்தை அலசுவதும், அதைப்பற்றி அறிந்து கொள்வதும் பெற்றோர்களுக்கு மிக, மிக முக்கியம். பிறகு தான் குழந்தைகளின் மனக்குழப்பத்தை தீர்க்க உதவ இயலும்.

“ஆமாம், அது என்ன “மேலாண்மை செய்யும் திறன்” (Managing the conflict) என்று கூறினீர்கள்? இதற்கு கூட மேலாண்மை படிப்பு இருக்கிறதா?” என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

அடுத்த மாதம் இதைப்பற்றி பேசுவோம் வாருங்கள்.

தொடரும்....

**காந்தலக்ஷ்மி சந்திரமௌலி.**

# தர்மத்தின் குரல்

## அத்தியாயம் 2 : மறுபிறப்பு

## 2.14. இன்னும் சில கேள்விகள் :

## பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

1. மேற்சொன்ன வேதக்கொள்கை, ஓர் உடலில் ஒரு ஜீவாத்மா என்கிறது. அப்படியானால், மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டிருப்பதேன்?

ஒரு சமயம், நான்கு மனிதர்களும் நான்கு பசுக்களும் இருந்தன என்று வைத்துக் கொள்வோம்.

அ) இந்த எட்டு ஜீவாத்மாக்களும் இறப்பிற்குப்பின் உடனேயே மறு பிறவி எடுத்தால், அந்த எட்டு ஜீவாத்மாக்களே தொடரும்.

ஆ) மனிதர்களும், பசுக்களும் முறையே மனிதர்களாகவும் பசுக்களாகவும் பிறந்தால்தான், 4 மனிதர்களும், 4 பசுக்களும் மீண்டும் இருப்பார்கள்.

இ) ஒரு பசு மனிதனாக மறுபிறவி எடுத்தால், மனிதர்களின் எண்ணிக்கை அதிகமாயிருக்கும்.

எனவே, மாற்றமில்லாத, நிலையான மக்கட்தொகை என்றால் மனிதர்கள், மனிதர்களாகவே பிறக்க வேண்டும். மனிதர்கள் மட்டும்தான் மனிதர்களாகப் பிறக்கிறார்கள், ஜீவராசிகள் இறந்த உடனேயே மறுபிறவி எடுக்கிறார்கள். ஜீவராசிகளின் மொத்த எண்ணிக்கை நிலையானது. மாறாதது என்றெல்லாம் ஆகின்றது. இதையெல்லாம் சாஸ்திரம் ஒப்புக் கொள்ளவில்லை. மனிதர்கள் தேவர்களாகவோ, விலங்குகளாகவோ ஆகலாம். மிருகங்கள் மனிதர்களாகப் பிறக்கலாம். இறந்த பிறகு சிலர் பிறப்பே எடுக்காமலிருக்கலாம். மேலும் ஜீவாத்மாக்களின் எண்ணிக்கை வரையறைக்கு உட்பட்டதுமல்ல. ஆதலால், மக்கள் தொகையில் ஏற்ற இறக்கங்கள் இருக்கத்தானிருக்கும். சிருஷ்டியின் முன்பு ஒரு ஜீவராசி கூட இருந்திருக்கவில்லை. பிறகு அவை தோன்றின. பின்னர் ஒரு நிலையில் மக்கள் தொகை அதிகரித்துள்ளது என்பதைவிட, ஒரு ஜீவராசி கூட இல்லாத நிலையிலிருந்து, அவை தோன்றியது என்ற நிலை மர்மம் நிறைந்ததல்லவா?



“முன் பிறவிகளைப் பற்றிய நினைவே இல்லாதிருக்கும் போது, அவற்றில் ஏன் நம்பிக்கை வைக்க வேண்டும்?”

உன் குழந்தைப் பிராயத்தைப்பற்றிய நினைவு உனக்கு இல்லை என்பதால், குழந்தைப் பிராயத்தை மறுக்க முடியாதல்லவா? அதைப்போலவே, உனக்கு நினைவில்லை என்பதற்காக முன்பிறவியை மறுக்க முடியாது.

“நினைவில் இல்லாமலிருப்பதற்கு ஏதேனும் காரணம் உள்ளதா?”

தொடரும்....

**நெரூபர் ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்திராள் ஆராதனை**
**105 ஆம் வருஷ உற்சவப் பத்திரிகை**

**தேதி : சித்திரை மாதம் 26ம் நாள் 09.05.2019 வியாழக்கிழமை**
**முதல் சித்திரை மாதம் 31ம் நாள் 14.05.2019 செவ்வாய்கிழமை வரை.**

இங்ஙனம்
நெரூர் ஸ்ரீஸதாஸிவப் பிரமேந்திர ஸபா, நெரூர் ஸத்குரு
ஸதாஸிவ ப்ரம்மேந்திராள் ஸேவா டிரஸ்ட்,
நிர்வாக அங்கத்தினர்களான பக்தர்கள் / டிரஸ்டிகள்

The DD/Cheque may kindly be issued favouring -
NERUR SRI SADHASIVA BRAHMENDRA SABHA
and sent to :
THE SECRETRAY, NERUR SRI SADHASIVA BRAHMENDRA SABHA,
RADHA XEROX, NO.1, HOSPITAL ROAD, KARUR - 639 001.
CASH DEPOSITS MAY ALSO BE MADE TO : SB A/C NO.430 2500 1000 42201
KARNATAKA BANK, KARUR BRANCH, IFSC CODE : KARB0000430

**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**
எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

| திருமதி. தனலட்சுமி | திருமதி. ராஜலட்சுமி |
|---|---|
| 9444140119 | 7092199447 |

# மஹாமேரு மண்டலி கோட்டூர் சித்திரை பௌர்ணமி விழா

மஹா மேரு மண்டலி கோட்டூர் சென்னை சார்பாக *19.04.2019* அன்று சித்ரா பௌர்ணமி திருவிழா பெரம்பலூர் மாவட்டம் சிறுவாச்சூர் அருள்மிகு ஸ்ரீ மதுரகாளியம்மன் ஆலயத்தில் சீரும் சிறப்பாக பல ஆண்டுகளாக நடந்துவருகிறது. *19.04.2019* வெள்ளிக்கிழமை காலை *7.00* மணி முதல் கோவில் வளாகத்திற்கு நியமத்துடன் வரத்துவங்கினார்கள். காலை *8.00* மணி முதல் ஆசார்ய பெருமக்கள் ஸ்ரீ சண்டி ஹோமம் துவக்கி, அம்பாள் சன்னதியில் அபிஷேக ஏற்பாடுகள் தொடர்ந்து மிகச் சிரத்தையுடன் நடைத்தினார்கள். பெண்டீர் பெருமக்கள் ஸ்ரீ சிவானந்த லஹரி, ஸ்ரீ ஸௌந்தர்ய லஹரி, ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணங்கள் நடைபெற்றன. ஸ்ரீ விகாரி வருடம் எல்லா ஜனங்களுக்கும் நோயற்ற வாழ்வு, விவசாய மேம்பாடு, காலத்திற்கு தேவையான மழை வேண்டியும் ப்ரார்த்தனை நடைபெற்றது. ஸ்ரீஸ்ரீஸ்ரீ மதுராம்பிகாநந்த ப்ரஹ்மேந்திர சரஸ்வதி அவதூத ஸ்வாமிகள் முன்னிலையில் ஸ்ரீ மஹாமேரு மண்டலி உறுப்பினர்கள் விழா ஏற்பாடுகளை செய்தார்கள். எல்லோருக்கும் பிரசாதம், சிற்றுண்டி, மதிய அன்னப்பிரசாதம் வெகு நேர்த்தியாக செய்திருந்தார்கள்.






உ
குருவே சரணம்

**வேதபாரதி**

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

**இல்லத்தரசிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

1. இளம் சிறார்களுக்கு நன்னெறி வகுப்புகள் நடத்திட
2. 7ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை கல்வி பயிலும் பெண் குழந்தைகளுக்கு சமூக வலைதளங்கள் தொடர்பாக விழிப்புணர்வு வகுப்புகள் நடத்திட, தன்னம்பிக்கை வாழ்வியல் கல்வி கற்றுக் கொடுக்க, விருப்பமுள்ளவர்கள் பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம்.
3. பதிவு செய்யும் பெண்களுக்கு (வயது வரம்பு 40க்குள்) பயிற்சி வகுப்புகள் இலவசமாக கற்றுக் கொடுக்கப்படும்.
4. வேதபாரதி ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளுக்கு வகுப்புகள் நடத்தினால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு :

**9443495950 / 99949 26537**

**Email : vedabharathichennai@gmail.com**



செங்கல்பட்டு அருகிலுள்ள சிவாலயத்திற்கு
பூஜை செய்ய பூஜை முறை தெரிந்த அந்தணர் தேவை.

**மாத சம்பளம் ரூ.12,000/-**

வீடு மற்றும் உணவுக்குத் தேவையான ஏற்பாடு செய்யப்படும்.

தொடர்புக்கு :

**9443495950 / 9790920672**


**குறிப்பு :**

**வேதபாரதி செய்திகள் புத்தகம் பிரதிமாதம் 12ம் தேதிக்குள் தங்களுக்கு தபால் மூலம் கிடைக்கவில்லை என்றால் 9443495950 / 9445102193 என்ற கைபேசி எண்ணிற்கு தங்கள் முகவரி, பின் கோடு மற்றும் தொலைபேசி எண்ணை SMS செய்யவும். உடன் தபாலில் அனுப்பி வைக்கிறோம்.**

**- வேதபாரதி**

## ப்ராஜெக்ட் மீனம்மா

ராமநாதபுரம் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் பொறுப்பாளர் ஸ்ரீ சுவாமி சுதப்பதானந்தா அவர்கள் உங்களை வந்து சந்திக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்று ஹோசூர், வாத்சல்யம் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு.கௌதமன் தொலைபேசியில் தெரிவித்த போது நான் ஆச்சர்யப்பட்டேன். ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் துறவி ஒருவர் என்னைத் தேடி வரும் அளவிற்கு நாம் ஒன்றும் 'பெரிய மனுஷி' இல்லையே என்று யோசித்தேன். எந்த விஷயத்திற்காக அவர் என்னை சந்திக்க விரும்புகிறார் என்று சொன்னதும் என் மனம் தளர்ந்துவிட்டது என்னைத் தெரிந்த அனைவருக்கும் தெரியும், என்னுடைய பலமும் பலவீனமும் 'கிராமப்புற பெண்குழந்தைகள்' என்று அவர்களின் பாதுகாப்பு, படிப்பு, வேலைவாய்ப்பு என்றால் என் மனம் சொல்லிவிடும். 'இந்தப் பணிக்காக இறைவன் உன்னைத் தேர்ந்தேடுத்திருக்கிறான்' என்று.

சுவாமிஜி என் இல்லம் தேடி வந்தார். என் அறக்கட்டளையின் மற்றொரு அறங்காவலர் திரு ஜி.எஸ்.சுப்பிரமணியன் அவர்களும் உடன் இருந்தார்கள். விஷயம் இதுதான்.

ராமநாதபுரத்தின் மீனவ சமுதாயத்தை சேர்ந்த பெண்குழந்தைகள் பொருளாதாரப் பிரச்சனையால் படிப்பைத் தொடர முடியாமலும், அதனால் வேலையின்றியும் இருக்கிறார்கள். அவர்களின் வாழ்வாதாரத்திற்கென்று ஒரு தொழில் கல்வியில் அவர்களை ஈடுபடுத்தி, படித்து முடித்தவுடனேயே வேலை கிடைக்கச் செய்து, தங்கள் காலிலேயே அவர்கள் சுயமாக உயர்ந்து நிற்க வேண்டும் என்பதற்காக, இந்த ஸ்வாமிஜி ஒரு சீரிய பணியில் ஈடுபட்டுள்ளார். கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக, 10வது, +1 மற்றும் +2 முடித்த பெண்குழந்தைகளை மிகவும் பயனுள்ள தொழில் படிப்பான 'நர்சிங்' கில் சேர்த்து, நன்கொடையாளர்கள் மூலம் அந்தப் பெண் குழந்தைகளின் எதிர்காலத்திற்கு வழிவகுத்துக் கொண்டிருக்கிறார்.



கடந்த ஆண்டுகளில் 60, 65 பெண்குழந்தைகள் இந்தப் படிப்பில் இவரது வழிகாட்டுதல் மற்றும் பொருளுதவியுடன் சேர்ந்துள்ளார்கள். இந்தப் பணியில், இந்த ஆண்டு முதல் எங்கள் அறக்கட்டளையின் உதவியையும் நாடியிருக்கிறார்.

என் வாசல் தேடிவரும் எந்த விஷயமாக இருந்ததாலும், அது என் அன்னை ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியின் விருப்பம் என்றும், என்னையும் ஒரு கருவியாக அவள் தேர்ந்தெடுத்து இருக்கிறாள் என்று சிரமேற்கொண்டு, அவளையே பிரார்த்தித்துக் கொண்டு, என்னால் ஆன வரையறைக்குள் முயற்சிகளை ஆரம்பித்துவிடுவேன்.

இந்த நர்சிங் படிப்பு டிப்ளோமாவாகவும் (3 ஆண்டுகள்) டிகிரியாகவும் (4 ஆண்டுகள்) இருக்கின்றது. ஆண்டு ஒன்றுக்கு தங்கும் ஏற்பாடு உள்பட ஒரு பெண் குழந்தைக்கு சுமார் ரூ.30,000/- செலவாகிறது.

எங்கள் அறக்கட்டளை இந்த கல்வி ஆண்டில் குறைந்த பட்சம் 10 மீனவக் குடும்பத்தின் பெண்குழந்தைகளையாவது நர்சிங் படிப்பு படிக்கவைக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டுள்ளோம். எங்களின் ஹோசூர் பணிகளின் பாரம் தெய்வ அனுக்ரகத்தால் சற்று இறக்கிவைக்கப்பட்டுள்ளது.

வேதபாரதி அன்பர்களை இந்த திட்டத்திற்கு கை கொடுக்க அன்போடு அழைக்கிறேன். நம் கண் முன்னால் ஒரு பெண்குழந்தை, நம் உதவியால் சுய காலில் நிற்கிறது என்பதைக் கண்கூடாகப் பார்க்கும் போது, நாம் அனுபவிக்கும் மன நிறைவும், நம்மால் கூட ஏதோ செய்ய முடிந்துள்ளதே என்கிற ஆத்ம திருப்தியும் அனுபவித்துப் பார்த்துவரும் என்னால், அதனை வார்த்தைகளில் வடிக்க இயலவில்லை.

இருபத்தி ஐந்து பெண்குழந்தைகளுக்கு திருமண உதவித்திட்டம், 100 பெண் குழந்தைகள் வசிப்பதற்கு பாதுகாப்பான வீடுகள், அவர்களுக்கென்றே ஒரு சிறிய கோவில்,

அனைத்தையும் உள்ளடக்கிய ‘சாரதேச்வரம்’ என்று முன் மாதிரி கிராமம் - இதெல்லாம் இரண்டு தனி மனிதர்களின் (நானும் ஹோசூர் கௌதமனும்) காகிதக் கனவுகள்தான் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு. இப்போது இறைவனின் அருளால், கருணை மனம் கொண்ட மனிதர்களின் உதவியால், எல்லாம் நிஜமாகி நிற்கிறது. ‘வேண்டாம்’ என்று ஒதுக்கப்பட்ட பெண்சிசுக்கள் இன்று அழகிய, அறிவான, அன்புமிக்க பெண் குழந்தைகளாய் வளர்ந்து நிற்பதை நெஞ்சம் நிறைந்து பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

உங்களாலும் முடியும். ஒரு மீனவப் பெண்குழந்தை உங்களால் உயர்ந்து நிற்கட்டும்!

மனமுள்ளவர்கள் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**என் தொடர்பு எண் : 99413 87193.**

"Project - Meenamma" என்று SMS கொடுங்கள். நானே தொடர்பு கொள்கிறேன்.

வேத பாரதிக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

**- டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**

வேதபாரதி உறுப்பினர்கள் தங்களால் இயன்ற பொருளுதவியை செய்து ப்ராஜெக்ட் மீனம்மாவிற்கு உதவுவதின் மூலம் நாம் பெரும் பேறு அடைவோம்.

ஆர். வெங்கட்ராமன், வேதபாரதி

## இரங்கல் செய்தி

வேதபாரதி குழுவின் மிக முக்கிய உறுப்பினராகிய தாம்பரம் ஸ்ரீ ராமசுப்ரமணியம் அவர்களின் அன்புத்தாயார் ஸ்ரீமதி லெட்சுமி அவர்கள் சித்திரை மாதம் 2ம் தேதி ஏகாதசி திதி (15.04.2019) அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அம்மா அவர்களின் ஆன்மா சாந்தி அடைய ப்ரார்த்தித்துக் கொள்கிறோம். வேத பாரதி தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

வேதபாரதி




# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

**மணிமங்கலம், தாம்பரம், சென்னை**

**CODE 1405**

**பாடப்பிரிவுகள்:**

**இளநிலை (பி.இ.)**

**MECHANICAL, CIVIL, CSE, ECE, EEE**

**கல்லூரியின் சிறப்பு அம்சங்கள்**

**வளாக கட்டமைப்பு: கல்லூரி வளாகம் பசுமைச் சூழலில் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் தனித்தனி வளாக கட்டமைப்பை தன்னுள்ளே கொண்டுள்ளது.**

**சிவனடியார்கள் குடும்பக் குழந்தைகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்.**



டாக்டர். **வி.பி.இராமமூர்த்தி.** பிஎச்.டி

நிறுவனம் மற்றும் கல்லூரி தலைவர்

மேனாள் அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்

# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

**டாக்டர். வி.பி.ஆர். நகர், மணிமங்கலம், தாம்பரம், சென்னை – 601 301, தமிழ்நாடு**

**Ph : 9 283 283 283 / 72 9999 6789 / 98416 55959**

**044 - 71 700 801 / 803 / 2436 3321.**


**www.dce.edu.in**

G. SIVAGAMASUNDARI
99940 89133



N. GURUMURTHY
99940 89140

**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.


## திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,
லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.

செல்: **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **12.05.2019 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## திருக்கோயில் உழவாரப்பணி

**05.05.2019, ஞாயிற்றுக்கிழமை**

மாங்காடு அருகில் உள்ள கொழுமணிவாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள **அருள்மிகு சிவகாமவல்லி அம்பாள் உடனுறை பாலீஸ்வரர் (தீர்த்தபாலீஸ்வரர்)**




ஆரோக்கியமான வாழ்க்கைக்கு
**பசுமை**
ஆர்கானிக் & நேச்சுரல்ஸ்

நெ. 5B/4, 7வது குறுக்கு தெரு, தண்டீஸ்வரம், வேளச்சேரி,
சென்னை - 600 042. (தினத்தந்தி அலுவலகம் அருகில்)
**044-42325018**

**இயற்கையாக விளைவிக்கப்பட்ட காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்கள்**

**செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் கிடைக்கும்**

**நாட்டு பசும்பால், பாரம்பரிய அரிசி வகைகள் சிறுதானியங்கள், மரச்செக்கு எண்ணெய், தேன் இரசாயனமற்ற அழகு சாதன பொருட்கள் மூலிகை பொடிகள், மூலிகை டீ மற்றும் எண்ணற்ற இயற்கை பொருட்கள் இங்கு கிடைக்கும்.**


## ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

### அன்றாடம் அக்குபிரஷர்

### அக்குபிரஷர் வரலாறு

நமது உடம்பில் நரம்புகள் எல்லா உறுப்புகளிலும் பரவியுள்ளன. இந்த நரம்புகளின் கடைசிப் பகுதியை அக்கு என்பார்கள். இந்த அக்கு, புள்ளிகளில் கொடுக்கப்படுகிற அழுத்தத்தை அக்குபிரஷர் எனவும், அக்குபுள்ளிகளில் ஊசிகளைக் கொண்டு குத்தினால் அக்குபஞ்சர் எனவும் கூறப்படுகிறது.

உடலின் தசைகளை இயக்குவது நரம்புகளின் வேலையாகும். இதை கருத்தில் கொண்டு நமது முன்னோர்கள், நம் உடலின் பாகங்களில் சில மர்மப் புள்ளிகள் உள்ளன என்று கண்டுபிடித்திருந்தார்கள். இந்த புள்ளிகளை நம் நாட்டில் வர்மப் புள்ளிகள் எனவும், சீனர்கள் அக்குபஞ்சர் புள்ளிகள் எனவும் பெயரிட்டனர்.

அக்குபஞ்சர் புள்ளிகளில் விரலினால் அழுத்தி அல்லது ஊசியால் குத்தி உடலிலுள்ள நரம்புகளையும், தசைகளையும் மறத்துப் போகச் செய்யவும் அவைகளின் செயல் திறனை ஊக்குவிக்கவும் முடியும் என்றும் கண்டுபிடித்தார்கள். இந்த முறைகளின் மூலம் நோய்களை குணமாக்கும் வைத்திய முறையே அக்குபஞ்சர் வைத்திய முறை என்றழைக்கப்படுகிறது.

இன்றைய பிரபல குங்பூ, கராத்தே, ஜூடோ என்று படிப்படியாக வளரும் சண்டைப் பயிற்சிகள், அக்குபஞ்சர் என்று மருத்துவ முறையிலிருந்து தோன்றியதே ஆகும்.


டாக்டர் **S.K.மீனா வாசுகி**
Acupuncture Specialist, Yoga & Varma Healer